RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s189

OPEN ACCESS

# முத்தொள்ளாயிரத்தில் முருகியல் கோட்பாடுகள்

ஜெ. காவேரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா

# Aesthetic Principles in the Muthollaiyiram

J. Kaveri [a, *]

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: kaveri@vvvcollege.org

Received: 29-07-2022
Revised: 23-09-2022
Accepted: 11-10-2022
Published: 08-12-2022

Check for updates

## ABSTRACT

Aesthetic principles add beauty to literature. Such principles are classified into many categories by various scholars. Poetry has many unique characteristics. Simile, initial rhyme, head rhyme and stratification are the few characteristics which adds beauty to poems. Aesthetic factors, i.e. the beauty of poetry is the term of art that refers to the overall language elements used to beautify a literature or a piece of poem, in which individual aesthetic elements and collective aesthetic elements are divided into two categories. Simile, metaphor, alliteration, paradox and allusion are the individual aesthetic elements. The collective aesthetic elements are characterized by the conceptual features found in poetry.

**Keywords:** Murugyal, Principles of Murugyal, Simile, Metaphor, Alliteration

## முன்னுரை

தமிழர் தம் இலக்கிய மாளிகையை அலங்கரிக்கும் இலக்கிய வகைகள் எண்ணற்றவை. தமிழ்நாட்டின் ஒப்பற்ற போர் வேந்தர்களாம் சேர, சோழ, பாண்டியர்களின் தன்னிகரில்லாப் புகழினைப் பறை சாற்றும் விதமாய் அமைந்திருப்பது முத்தொள்ளாயிரம். இதில் வேந்தர்களின் பெருமைகளை ஆசிரியர் அக, புறப் பாடல்களால் வெளிப்படுத்தியுள்ளார். முத்தொள்ளாயிர இலக்கியம் கருத்தாற்றலாலும், கற்பனையாற்றலாலும், சொல்லாற்றலாலும் சிறப்புற்று விளங்குவது. செவ்வியல் இலக்கியங்களுள் ஒன்றாகவும் இது திகழ்கின்றது. தற்போது மொத்தம் 109 பாடல்கள் மட்டுமே நமக்குக் கிடைத்துள்ளன. வெண்பாக்களால் அமைந்த இப்பாடல்களில் ஒரு பாடல் கடவுள் வாழ்த்தையும், 22 பாடல்கள் சேரமன்னனையும், 29 சோழனைப்பற்றியும், 57 பாண்டிய மன்னனையும் குறிக்கின்றன. மொத்தப்பாடல்களும் நாயகி, பெற்றதாய், செவிலித்தாய், தோழிகள் ஆகிய நான்கு 16 பாத்திரங்கள் பேசுவதாகவே படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடலிலும் பாடுபொருளுக்கேற்ப உணர்ச்சியின் உச்சக்கட்டம் கொட்டிக் கிடப்பதுவே முத்தொள்ளாயிரப் பாடல்களின் சிறப்பு எனக் கொள்ளலாம். இப்பாடல்களை இயற்றிய ஆசிரியரின் பெயரும் காலமும் திட்டவட்டமாக அறியப்படவில்லை. ஆனால், இதன் காலம் கி.பி. 5-க்கும் கிபி. 8-க்கும் இடைப்பட்டது என்பது அறிஞர் கருத்து.

முருகியலும் கவிதையும் (Aesthetics and poetry) கவிதைக்கென்று தனிப்பட்ட பண்புகள் பல இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, எதுகை, மோனை, அடுக்குத்தொடர், உவமை, உவமானம் முதலியவற்றின் பயன்பாட்டைக் கூறலாம். இவை எல்லாம் கவிதைக்கு அழகு சேர்க்கின்றன. முருகியல் கூறுகள், அதாவது கவிதையின் அழகு என்பது ஓர் இலக்கியத்தையோ கவிதையையோ அழகூட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒட்டுமொத்தமான மொழிக்கூறுகளைக் குறிக்கும் கலைச்

சொல்லாகும். அவ்வகையில் முத்தொள்ளாயிரத்தில் இடம்பெறும் முருகியல் குறித்து ஆய்வதாய் இக்கட்டுரை அமைகின்றது.

அழகியல் கூறுகளை இரண்டாகப் பிரித்துப் பார்க்கலாம் (Balakumar, 2014). ஒன்று, தனி நிலை முருகியல் கூறுகள் (Aesthetic Aspects in Isolation). இந்த மொழிக் கூறுகள் ஒவ்வொன்றையும் ஒரு கவிதையில் தனித்தனியாகப் பிரித்தறிய முடியும். இவற்றைக் கீழ்வரும் பதினோரு வகைகளாகப் பிரித்தறியலாம். அவையாவன, தொடை வகைகள், உவமை, உருவகம், மரபுத் தொடர்கள், குறிப்பு முரண், அங்கதம், பொருள் மயக்கம், மெய்ப்பாடு, படிமம், குறியீடு, யாப்பு. இரண்டாவது, கூட்டு நிலை முருகியல் கூறுகள் (Aesthetic Aspects in its Totality). இவை இலக்கியப் பகுதியின் ஒட்டு மொத்தமான தன்மைகளை நோக்குவதாக அமையும் முருகியல் கூறுகள். இக்கூறுகளை முக்கியமாக உரைக்கோவையில் காணலாம். இதற்கு எடுத்துக்காட்டாக, குறிப்பிட்ட நடை, பழமொழிகளுக்கும் அவை பயன்படுத்தப்பட்டுள்ள கருத்துச் சூழலுக்குமுள்ள தொடர்பு, மரபுக்கதைகள், அதனொடு தொடர்புடைய கிளைக்கதைகள் முதலியவற்றைக் கூறலாம். தனிநிலை முருகியல் கூறுகள் பகுப்பாய்வு ஒவ்வொரு தனிநிலை முருகியல் கூறுக்கும் இருக்கிற தன்மைகள் ஐந்து என்று மைசூரிலுள்ள இந்தியத் தேர்வுப்பணி மையம் வரையறுத்துள்ளது. அவையாவன, பொருளும் எல்லையும் (Meaning and Scope), வகையும் தழுவுமையும் (Types and Adaptability), வடிவமும் கட்டமைப்பும் (Forms and Structures) நோக்கமும் பயனும் (Purposes and Uses)> பொதுப் பண்பு (General Characteristics) என்பனவாகும் (Balakumar, 2014).

அழகியல் கூறுகள் அல்லது முருகியல் கூறுகளைத் தனிநிலைக் கூறுகள் என்றும் கருத்தாடல் கூறுகள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். உவமை, உருவகம், மரபுத்தொடர், குறிப்பு முரண், அங்கதம், மெய்ப்பாடு, குறியீடு, படிமம் போன்றவை தனிநிலைக் கூறுகளாகும். மொழி நடை, புலப்பாட்டு நெறி, பழமொழி போன்றவை கருத்தாடல் கூறுகளாக அமையும். இவ்வாறு முருகியல் கோட்பாட்டுகளின் அமைப்பினைப் பிரிப்பாரும் உளர்.

இவ்வாறு முருகியல் கூறுகளைப் பிரித்தறிய முயற்சி செய்யும்போது படைப்பாளியின் மனக்கண்களில் விழுந்த அழகுக் கூறுகள் வாசிப்பவரின் தன்மைக்கு ஏற்ப அமைய வேண்டும் அல்லது அவ்வாறு மனக்கண்ணில் விழுந்தவற்றைக் கொள்கைகளின் துணையோடு பார்க்க முயல ஓர் ஒப்பந்தம் தேவைப்படுகிறது. இவ்வாறான ஒரு 'மனஅதிர்வுஅலை' இருவருக்கும் படைப்பாளிக்கும் படிப்பாளிக்கும் இடையே ஒன்றாக வீசத் தொடங்கினால் தான் அந்த இயற்கைப் புனைவுகளை அனுபவிக்க இயலும்.

இலக்கியத்தில் என்ன சொல்லப்படுகிறது என்பதை விட எப்படிச் சொல்லப் பட்டிருக்கிறது என்பதே பார்க்கப்பட வேண்டியது இவை அழகியல் திறனாய்வின் (Aesthetic Criticism) அடிப்படையாகும். தோற்றத்தின் திரட்சியும் நளினமும் இலயம் முதலியன முதலில் ரசிக்கப்பட வேண்டும். அதன் இனிமையே ஒரு சுகானுபவம் என ரசனையை முதன்மைப்படுத்துகிறது இத்திறனாய்வு. ஆயினும் இது திட்டவட்டமான அறிவியல் பூர்வமான ஒரு முறையியலுக்கு உட்பட்டதல்ல. பெரும்பாலும். மனப்பதிவு (impression) முறையிலேயே இது கூறப்படுகிறது. சொல்லிலும் ஓசையிலும் காணக்கூடிய ஒருவித ஒழுங்கமைவு தொனி, பொருட்சுழற்சி, உணர்ச்சி வடிவங்கள், உவமை, உருவகங்கள், ஆர்வத் தூண்டல்கள் முதலியவை ரசனைக்குரிய பகுதிகளாகும் இவற்றை விளக்குவதையும் வர்ணிப்பதையும் முக்கிய பணியாகச் செய்கிறது. 17 உள்ளடக்கம், பயன், இலக்கியப் போக்குகள், கொள்கைகள், வரலாறு ஆகியவை பற்றி இது கவனம் செலுத்துவதில்லை அதோடு பல சமயங்களில் மறுத்துரைக்கவும் செய்கிறது. ரசனை முறைத்திறனாய்வின் முன்னோடியும் அதனை இயக்கமாகவே நடத்தியவருமான ரசிகமணி "கவிக்கு செய்தியல்ல - உருவமே பிரதானம்" எனக் குறிப்பிடுகிறார் (Chidambaranatha Mudaliar, 1957). இவர் உருவத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினாலும் அதற்கு அவர்தரும் விளக்கம் மேலை நாட்டு உருவவியலாளர்கள் (Formalists) தரும் விளக்கத்திலிருந்து மாறுபடுகிறது. உருவவியல் திறனாய்வு என்பது அதன் பல்வேறு உறுப்புகளால் ஆனது என்றும் அவை அழகியல் அடிப்படையில் ஒன்றிணைந்து அமைகின்றன என்றும் கூறுவதுடன் இவ்உருவத்தினை அறிவியல் பூர்வமாகவும் விளக்குகிறது. ஆனால் ரசனை முறைத் திறனாய்வு, இலக்கியத்தை அது ஏற்படுத்தும் உணர்வு அடிப்படையில் சுவைப்பதைப் பற்றி மட்டுமே விளக்குகிறது. அற்புதரசம் ஏற்படும்பொழுது அதற்கு உருவம் தோன்றி கலை பிறக்கிறது என்கிறார் (Chidambaranatha Mudaliar, 1957).

முத்தொள்ளாயிரத்தில் அமைந்துள்ள முருகியல் கோட்பாடுகளை தனிநிலை முருகியல் கூறுகள் மற்றும் கருத்தாடல் முருகியல் கூறுகள் எனும் அமைப்பில் இங்கு காணலாம்.

## தனிநிலை முருகியல் கூறுகள்

உவமை, உருவகம், மரபுத்தொடர், குறிப்பு முரண், அங்கதம், மெய்ப்பாடு, குறியீடு, படிமம் போன்றவை தனிநிலைக் கூறுகளாகும். இத்தனிநிலை முருகியல் கூறுகள் முத்தொள்ளாயிரத்தில் பெரும்பாலும் காணக்கிடக்கின்றன.

## உவமை

கவிதைக்கு உயிர்த்துடிப்பாய் அமைவது கவினுறு உவமைகளேயாம். உவமைகள் இன்றேல் கவிநலம் இல்லை. முத்தொள்ளாயிரத்தின் முதல் பாடலே உவமை நயத்துடன் இடம்பெறுகின்றது. பாராளும் சேர அரசன் பால்நிலவு போல் பவனி வர அவனுக்கு அடங்கிய சிற்றரசர்கள் சிதறிக்கிடக்கும் விண்மீன்களைப் போன்று இருந்தார்கள். அரசனைக் காணவிடாது தலைவி இற்செறிக்கப்படுகின்றாள் (Chidambaranatha Mudaliar, 1957). அன்னை காவல் இருக்கின்றாள். அதுகுறித்து அஞ்சாத தலைவி, மனம் தான் அரசனிடம் சென்று விட்டது. காடை பறந்த பின் வெறுங்கூட்டைக் காவல் காக்கும் வேட்டுவன் போல் தாய் இருப்பதாக சொல்கின்றாள். இதனை,

"குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன் போல்அன்னை

வெறுங்கூடு காவல் கொண்டாள்"

என்ற பாடல் வரிகள் சுட்டுகின்றது (Chidambaranatha Mudaliar, 1957). உடலை மட்டும் காவல் காக்கும் அன்னை குருவி பறந்து சென்ற கூட்டைக் காவல் காக்கும் வேட்டுவனுக்கு ஒப்பிடப்படுகின்றது. இதனைப் போன்று முத்தொள்ளாயிரம் முழுமையும் பல்வேறுவிதமான உவமைகள் நிறைந்து காணப்படுகின்றது.

## மெய்ப்பாடு

சமுதாயத்தில் அன்றாடம் நடைபெறும் பல்வேறுவிதமான கருத்துப் பரிமாற்றச் சூழல்களின் தாக்கம் மனித உறவுகளிடையே அவ்வப்போது தோன்றி மறைகிற உணர்வுகளின் வெளிப்பாடு முதலியவற்றின் அடிப்படையில் மனித உணர்வுகளைத் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியலில் பின்வரும் எட்டு அடிப்படைக் கூறுகளின் வாயிலாக விளக்குகிறார். அவையாவன,

"நகையே அழுகை இளிவரல் மருட்கை

அச்சம் பெருமிதம் வெகுளி உவகை

என்று அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

இந்த எட்டு அடிப்படைக் கூறுகளையும் மெய்ப்பாட்டின் மைய எல்லையாகக்கொள்ளலாம் (Adikalasiriyar, 1985). மேலும், தொல்காப்பியர் மேலே கூறிய எட்டு மெய்ப்பாடுகளும் ஏற்படும் சூழலைக் கூறும்போது ஒவ்வொரு அடிப்படை முருகியல் கூறுக்கும் நான்கு துணைக் கூறுகளைக் கூறி மொத்தம் பின்வரும் 32 துணைக்கூறுகளாகக் கூறியுள்ளார். அவையாவன சிரிப்பு-இகழ்தல், இளமை, அறியாமை, தெரிந்தும் தெரியாததைப்போன்று இருத்தல் ஆகிய நான்கு பண்புகளால் வரும் அழுகை- இழிவு, இழப்பு, தளர்ச்சி, வறுமை முதலிய மெய்ப்பாட்டின் வகைகளுள் ஒன்றான அவலச்சுவைக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது. சேறும், நீரும் நிறைந்துள்ள வயலில் செவ்வாம்பல் பூக்கள் பூத்துள்ளன. நீர்வாழ்ப் புள்ளினங்களின் குஞ்சுகள் செவ்வாம்பல் பூக்களின் அருகில் நீந்திவருவதைப்பார்த்த தாய்ப்பறவை பயம் கலந்த பாசத்தினால் "ஐயோ! நெருப்பானது என் குஞ்சுகளின் கை போன்ற சிறகுகளைச் சுட்டெரித்துவிடுமோ!" என்றெண்ணி வேகமாகக் குஞ்சுகளின் அருகில் நீந்தி வந்துஇ தன்

இறக்கைகளால் குஞ்சுகளை அணைத்துக் கொண்டனவாம். இந்தப்பாடலில் தாய்ப்பறவை தன்னையும் தன் குஞ்சுகளுள் ஓர் அங்கமாகப்பாவித்து உடனே செயல்பாட்டில் தன்னை ஈடுபடுத்திக்கொள்கிறது.

"அள்ளல் பழனத்(து) அரக்காம்பல் வாய் அவிழ,

வெள்ளம் தீப் பட்ட(து) எனவெரீஇப்இ புள்ளினம்தம்

கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ

நச்சிலைவேல்க் கைகோதை நாடு"

ஆத்திரம், நகைச்சுவை, இகழ்ச்சி ஆகிய மூன்று எதிர்மறை உணர்வுகள் கண்ணி வடிவில் இதன் கட்டமைப்பாக வருவதைப் பார்க்கலாம் (Chidambaranatha Mudaliar, 1957). சோழ மன்னன் மேல் காதல் கொண்டு நிலைதடுமாறிப் போன சோழநாட்டுப்பெண் ஒருத்தி சோழமன்னன் தன்னிடம் வந்து தன் ஆடையைப்பறித்துக்கொண்டு போய்விட்டதாகப் பகற்கனவு காண்கிறாள். ஆத்திரமடைந்த அவள் இதுதான் இம்மன்னன் செங்கோல் செலுத்தும் அழகா என்ன. நான் அவனை விடமாட்டேன். அவன் பவனிபோகும்போது அவனுடைய படைகளும் அணிவகுத்துப்போகும். அப்பொழுது யாசகர்களுக்கு யானைகளை அள்ளிவீசும் அவனுடைய நீளமான கை செய்த இந்தத் தகாத செயலை எல்லோர் முன்னிலையிலும் கூறி அவனை அவமானப்படுத்திவிடுகிறேன் என்று இகழ்ச்சியும் நகைச்சுவையும் வெளிப்படும்படிக் கூறுகிறாள்.

"தானை கொண்டு ஓடுவதாயின் செங்கோன்மை

சேனை அறியக் கிளவேனோ யானை

பிடி வீசும் வண் தடக்கைப் பெய் தண் தார்க் கிள்ளி

நெடு வீதி நேர்பட்ட போது."

இவ்வாறு முத்தொள்ளாயிரத்தில் மெய்ப்பாடுகள் காணப்படுகின்றன. மேலும் அள்ளல் பழனத்து எனத் தொடங்கும் பாடலே படிமம், கற்பனை போன்ற கூறுகளுக்கு சிறந்த விளக்கமாகவும் அமைகின்றது. தனிநிலை முருகியல் கூறுகளுள் பல இருப்பினும் சிலவற்றை மட்டுமே இங்கு சுட்டியுள்ளோம் (Chidambaranatha Mudaliar, 1957).

## கூட்டுநிலை முருகியல் கூறுகள்

பாடலின் கருத்துக்களின் அழகினைக் கூறுவதைக் கூட்டுநிலை முருகியல் என்று சுட்டலாம். முத்தொள்ளாயிரத்தில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பாடல்களும் சேர சோழ பாண்டியர்களின் பெருமை, வீரம், கொடைச்சிறப்பு போன்றன பல்வேறு நிலைகளில் சுட்டப்பட்டுள்ளன.

## முடிவுரை

முருகியல் கூறுகள் இலக்கியங்களுக்கு அழகு சேர்ப்பதுடன் படிக்கும் ஆர்வத்தையும் வாவகர்களுக்கு ஏற்படுத்தக்கூடியது. இம்முருகியல் கூறுகளே இலக்கியங்களின் அக அமைப்பையும் புற அமைப்பையும் நிர்ணயம் செய்வது. சங்க இலக்கியங்கள் அனைத்துமே முருகியல் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்தவையே. ஆனால் முத்தொள்ளாயிரம் இலக்கியம் முருகியல் கோட்பாட்டின் உச்சம் எனுமளவு அதில் அனைத்துக் கூறுகளும் நிறைந்து விளங்குவதாய் திகழ்கின்றது. அதனை வெளிக்காட்டுவதாய் இவ்ஆய்வு அமைந்துள்ளது.

## References

Adikalasiriyar, (1985) Tholkappiyam Porulathiagaram, Tamil University, Thanjavur, India.

Balakumar, M. (2014) Ilakkiyathin pothumaik kurukal: Karuthiyal Vilakkam Ilakkiyam, India Mozhi naaduvan niruvanam, India.

Chidambaranatha Mudaliar, (1957) Muthollaayiram, Pothigai Malai Pathippu, Thirukutralam, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License